Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2387

# கற்பகம்

தெங்கு - பனம் பொருட் கூட்டுறவுச் செய்தி

விலை ரூ. 2/-

வடமாகாண தெ.ப.பொ.கூ. சங்கங்களின் சமாச வெளியீடு

மலர்: 5

இதழ்: 2

## இந்த இதழில்...


- ஆசிரியர் தலையங்கம்
- பனம் பொருள் ஆலோசகரின் கடிதம் - 2
- குருவிச்சைகள் (கவிதை)
- இயற்கை வளமும் அழிவுறும் உயிரினங்களும் (கட்டுரை)
- குறுக்கெழுத்துப் போட்டி
- காலம் கடந்த ஞானோதயம் (சிறுகதை)
- சங்கச் செய்திகள்


பெப்ரவரி 1984

வடமாகாண
தெ. ப. பொ. கூட்டுறவுச் சமாசம்
330, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

## உள்ளடக்கம்...

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2387

| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் ... ... | 1 |
| "நல்ல தருணம்" பணம் ... ... பொருள் ஆலோசகரின் கடிதம்—2 | 2 |
| குருவிச்சைகள் (கவிதை) ... ... | 4 |
| அவர்கள் எழுந்து விட்டார்கள் (தொடர்ச்சி) ... | 6 |
| கற்பகமே நீ வாழி ... ... | 9 |
| எழுச்சி கொண்டெழு ... ... | 10 |
| இயற்கை வளமும் அழிவுறும் உயிரினங்களும் (கட்டுரை) ... | 11 |
| குறுக்கெழுத்துப் போட்டி ... ... | 16 |
| சந்தை ஆய்வு ... ... | 18 |
| காலம் கடந்த ஞானோதயம் (சிறுகதை ... | 22 |
| சங்கச் செய்திகள் ... ... | 25 |
| வாசகர் கருத்து ... ... | 28 |

வடமாகாண தெ. ப. பொ. கூ. சமாசம்
330, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

உங்கள் கையில் தவழும் கற்பகம் சஞ்சிகை
எம்மால் அச்சிடப்படும் சஞ்சிகைகளில்
ஒன்று
திறமையான, அழகான அச்சு
வேலைகளுக்கு எம்மை நாடுங்கள்
வாடிக்கையாளருக்கு சிறந்த 'சேவை
செய்வதே எமது நோக்கம்'
மேலும் விபரங்களுக்கு

# கலைவாணி அச்சகம்

10, மெயின் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 22121
(வட இலங்கையின் முன்னணி அச்சக விற்பனர்கள்)

---

# A. C. S.

## தொகுதி ஸ்தாபனங்கள்

கடந்த 21 வருடகாலமாக யாழ்நகரில்
வாடிக்கையாளருக்கு சேவை செய்துவருபவர்கள்
காகித வகைகள்
நீதிமன்ற உறுதிப்பத்திரங்கள், உள்நாட்டு,
வெளிநாட்டு, முத்திரைகள் இன்னும் பல
ஓரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள

A C S தொகுதி ஸ்தாபனங்கள்

தொலைபேசி:
யாழ்ப்பாணம்:- 021 - 23460 121, 1ஆம் குறுக்குத்தெரு
சுன்னாகம்:- 274 யாழ்ப்பாணம்

# வழி பிறக்கட்டும்!

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் பழமொழி. பிச்சைக்காரன் கூட 'தை பிறந்துவிட்டது தையடி பொக் கணத்தை. என்றும்சொல்வானும், பிச்சை எடுப்பவனுக்கும் கூட அவ்வளவு நம்பிக்கை இந்த தைப்பிறப்பில்.

அந்தளவுக்கு தமிழ் மக்கள் தைப்பிறப்பிற்கு அளித்துவரும் முக்கியத்துவம் மகத்தானது.

ஆனால் ஒன்றுமே செய்யாது சோம்பிக் கிடந்து கொள் பவனும் தைபிறந்துவிட்டது, வழி பிறக்கும் என்று சொல் வதில் ஏதாவது அர்த்தம் பொதிந்திருக்கிறதா?

முயற்சியாளர்தான் தைப்பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து தைப்பிறப்பில் பழமொழியை கூறவேண்டும். அதில் தான் அர்த்தமுண்டு.

எவ்வாறுயினும் எமது தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற் பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் தை பிறந்துவிட்டது வழி பிறக்கும் என்றே நம்புகின்றன.

ஆம், (பனைகளின் கொடியேற்றம்) பனைகள் பாளை வரும் காலமும் தையுடன்தான் ஆரம்பிக்கும்.

ஆறு மாத உறக்கத்தின் பின்பு சங்கங்கள் துயில் எழுகின் றன. அங்கத்தவர்கள் தமது துருப்பிடித்த கருவிகளைத் தீட் டத் தொடங்குகின்றனர்.

ஆறு மாதம் தொழிலும் மற்ற ஆறு மாதமும் உறக்கமுமாக கும்பகர்ண நிலை.

இதற்கு விமோசனமே இல்லையா?

இந்த ஆறுமாதமும் "கள்" அமோகமாக வரப்போகின்றது. அதில் பெரும் பகுதி மீண்டும் பூமியிலே ஊற்றவேண்டிய நிலை.

இந்த அவல நிலை நீடித்துத்தான் செல்ல வேண்டுமா? சில சங்கங்கள் "கள்"போத்தலடைப்பு தொழிற்சாலைகளை நிறுவி யுள்ளன.

இவைகள் ஓரளவு தப்பிப் பிழைக்க முடியும். ஆனால் ஏனைய சங்கங்களின் நிலை?

ஒரு மாற்று யோசனை; இந்தியப் பனம் பொருள் நிபுணர் திரு' கே. சம்பந்தம் அவர்கள் கூறுகின்றார்.

'தெ.ப பொ.கூ.சங்கங்கள் கள் உற்பத்தியுடன் மட்டும் நின்று விடக்கூடாது. (பதநீர்) கருப்பனீர், பனங்கட்டி, பாணி, கல் லாக்காரம் போன்றவற்றை செய்வதிலும் கவனம் செலுத்து தல்வேண்டும். அப்போதுதான் சங்கங்களுக்கும், அங்கத்தவர் களுக்கும் விமோசனம் ஏற்படும்"

முன்பு பனங்கட்டித் தொழிலைச் செய்து தோல்வியுற்ற சங்கங்கள் இதைக் கேட்டு முகம் சுழிக்கலாம். இவற்றை சந்தைப்படுத்துவது, பேணிப்பாதுகாப்பது போன்ற பிரச்சினை களைக் குறித்து,

ஆனால், அந்தக் கவலையே இனிமேல் தேவையில்லை. உடனுக் குடன் இவற்றை கொள்வனவு செய்து சந்தைப்படுத்த கிராம மாதிரிக் கொம்பனிகள் காத்திருக்கின்றன.

ஆகவே, இந்த தைப்பிறப்புடனாவது நிபுணரின் மேற்படி யோசனைகளை ஏற்றுசெயல்பட்டால் சங்கங்களுக்கும், அங்கத்த வர்களுக்கும், சமூகத்திற்கும் வழி பிறக்கும் என நம்பிவாழ்த்து கிறோம்!

— ஆசிரியர்

பனைப்பொருள் ஆலோசகரின் கடிதம் — எண்-2

# " நல்ல தருணம் "

கற்பகத்தின் பொருள்களை உற்பத்திசெய்யும்கடினஉழைப்பாளிகளே! வணக்கம்.

இந்த மாதம் 'பனை ஏற்றுக் கருவி' என்றபொருள்பற்றிதங்களிடம் விவாதிக்க முன்வருகிறேன்.

நம்முடைய தொழிலில் உள்ள தலையாயப் பிரச்சனை, நீண்டு நிமிர்ந்து, பற்றிப் பிடித்து ஏற கிளைகள் இல்லாமல் வளரும்பனை மரங்களிலிருந்து கள், பதநீர் இறக்க வேண்டியஉழைப்பாகும்.

## ஆராய்ச்சிகள் ரூபா ஒரு இலட்சம் பரிசு

30 முதல் 50 அடி உயரம் வரை உள்ள பனையில் தினம் இரண்டு தரம் ஏறி இறங்கி, உடலைவருத்தி பாளையைப்பக்குவப்படுத்தி கள், பதநீர் சேகரித்து மக்களுக்குத் தருகிறோம். பனையில்ஏறியிறங்க வசதியான கருவி கண்டுபிடித்து தருவோருக்கு ரூபாய்ஒருலட்சம் பரிசளிப்பதாய் இந்திய அரசு தெரிவித்தது, பயனில்லை. இலங்கையில் கையாளப்பட்ட, கயிற்றின் மூலம் பனைகடத்தல் (Areial Ropeways) கோந்தையைக் கட்டி, கை குத்தீரறுதல்போன்றமுறைகளை இந்திய பனைத் தொழில்வல்லுனர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

பலஆராய்ச்சிநிலையங்களையும், பல்கலைக்கழகங்களையும், நிபுணர்களையும் இடைவிடாது அணுகி, தோல்வியுற்றேன். இறுதியில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு- சூசைசேவியர் என்ற இன்ஜினியர் என்கற்பனைக்கு உருக்கொடுத்து இரும்பு ஏணி முறையைக் கண்டு பிடித்தார். அவரை தமிழ்நாடுமாநிலப் பனை வெல்லக் கூட்டுறவுச்சம்மேளனம் தங்கமெடல் பரிசளித்துக் கௌரவித்தது-

## சமஎடை பளுவால் ஏறுதல் [Counter Weight Balance System]

இறுதியாகநானும், இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த திரு. தோமஸ் பேக்கர் என்பவரும் சேர்ந்து 1983ம் ஆண்டு, சமஎடை பளுவால்ஏறிபிறங்கும்கருவியை சென்னை குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் வைத்து உருவாக்கினோம், அதை தமிழ்நாடு, பனைத் தொழில் வல்லுனர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து

சுமார் ரூபா 7 இலட்சம் வரை வழங்கி, 100 படித்த வேலையற்ற வாலிபர்களுக்கு தொழில் தருவதுடன் இந்திய இயற்கைச் செல்வத்தைப் பெருக்க ஏற்பாடுசெய்துள்ளது- முன்னோடித் திட்டமாக-

## இலங்கையில் பனை ஏற்றுத் தொழிலும் படித்தவர்களும்

மகிழ்ச்சிக்குரிய விஷயம்! இலங்கையில் படித்தவர்கள் பனைஏறித் தொழில் புரிவதுடன், சங்கத்தலைவர்களாயிருந்து கொண்டு, திறம்படப் பனைப்பொருள் கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்கிறார்கள். ஜனநாயக முறைப்படிபேரவைக் கூட்டங்களை நடத்திஉழைப்பாளிகளின் உரிமைகளை பாதுகாக்கின்றனர்-

காந்திஜி அவர்கள் வர்தாவில் திரு. விட்டோவா என்ற சமுதாயத்தில்பின்னுக்குத்தள்ளப்பட்ட ஒருவரைக் கொண்டுபதநீர் இறக்கச் செய்து, தானும் குடித்தார் மக்களையும் பருக வேண்டினார் படித்த இளைஞர்களும் மரம்ஏறும் தொழிலுக்கு வர வேண்டும் என்று கனவு கண்டார், இலங்கையில் உள்ள, முக்கியமாய் பனைத் தொழில்புரியும் இளைஞர்கள், காந்தியடிகளின் கனவை நனவாக்கியுள்ளனர். இந்தப் பெருமையையும் யாழ்ப்பாண பனைத்தொழில் வல்லுனர்கள் தட்டிக்கொண்டு விட்டார்கள் தமிழகம் இரண்டாவது ஸ்தானத்தில்தான் இருக்கிறது,

நான் பார்த்த சங்கங்களில்எல்லாத் தலைவர்களும் படித்தவர்களே. முக்கியமாய்கிரீடம்வைத்த மாதிரி, பனைப்பொருள் சமாசத்தின் தலைவராக நன்குபடித்த, துடிப்புள்ள பனைத்தொழில் வல்லுநர், இளைஞர் திரு. அமிர்தநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் செய்வதாகும்.

## யாழ்ப்பாணத்தில் புதிய பனை ஏற்றுமுறை

புதிய பனை ஏற்றுக் கருவியை, யாழ்ப்பாண இளைஞர்கள் கையாளஏற்பாடுசெய்துள்ளேன். விரைவில் பனைப் பொருள்சங்கம் ஒன்றில் வைத்து பரீட்சார்த்தமாய் வேலை செய்யும் விதம் காட்டப்படும். அதன்உபயோகத்தைப் பற்றி பனைத்தொழில் வல்லுனர்களின் அபிப்பிராயத்தை அறிந்தால் அதைப்பற்றி விபரமாக விவாதிக்கலாம். சாதகமாய்இருப்பின்ஏற்றுக்கொள்ளலாம்-மேலும் அபிவிருத்திக்கு ஆலோசனை கூறுங்கள். இந்த பனை ஏற்றுக் கருவியின் சாதக பாதகங்களை அடுத்த கடிதத்தில் விவாதிப்போம். நவீனகருவிகளையும்முறைகளையும் இளைஞர்கள் நன்கு அறிந்து செயல்பட இது தான் நல்ல தருணம்''

வணக்கம்

வளர்க பனையினம்! வளர்க பனைத் தொழில்!

K. சம்பந்தம்
பனைத்தொழில் ஆலோசக
யாழ்ப்பாணம்

கவிதை

# குருவிச்சைகள்

காரை செ. சுந்தரம்பிள்ளை

உழைத்திடாமற் பிழைத்திடும் கூட்டம்
உலகம் தோன்றிய நாள் முதல் உண்டு
களைத்தி டாமற் சொகுசாய் இருந்து
காலந் தள்ளவே யார்க்கும் விருப்பம்
அழைத்தி டாத விருந்தாளி யாக
அடுத்த வர்களில் தங்கியே வாழ்ந்து
இளைத்தி டாதுடல் தன்னை வளர்க்கும்
ஏராளம் குருவிச்சைகள் உண்டு

ஆதி நாளிற் பசுக்களே செல்வம்
ஆகை யால்பல கொள்ளையர் சேர்ந்து
மோதி ஆநிரை கொண்டு சென்றார்கள்
முதற் திருடர் இவர்களே யாவர்
ஓதும் நாகரீ கம்வளர்ந் தோங்க
உலகிலே பவுண் பொன் நகை தோன்ற
மாத ரார் இவை யாவும் அணிய
மலிய லாயிற்று கொள்ளை கொலைகள்

காலம் செல்ல நவீனவிஞ் ஞானக்
கருவிகள் மிக வுற்பத்தி யாக
ஞாலம் எங்கும் பொருட்கள் பலவும்
நாளும் வந்து குவிந்திட லாச்சு
வேலை பார்த்து இவற்றைத் திருடும்
வித்தை கற்றவர் உற்பத்தி யானார்
ஆளைக் கூடத்திருடிப் பிழைக்கும்
அண்டப் புரட்டர் உருவாக லானார்

துயரம் போக்கும் இறைவன் சிலையைத்
துயர மின்றித் திருடு கின்றோரும்
பயமி லாது விமானத்தைக் கூடப்
பாதை மாற்றி இறக்கிடு வோரும்

சயிக்கிள் கார்கள் அபகரிப் போரும்
தலைக்கவ சத்தைக் களவெடுப் போரும்
கயவர் தாழ்ந்த புலைக்குணம் மிக்கார்
காசி னிக்கிவர் மெத்தவும் பாரம்

சீத னத்தின் பெயரினால் கொள்ளை
செந்தமிழின் பெயரினால் கொள்ளை
ஆதனத்தின் பெயரினால் கொள்ளை
அதிகா ரத்தின் பெயரினால் கொள்ளை
சாதி யின்பெய ரால்பல கொள்ளை
சமயத்தின் பெய ராலிங்கு கொள்ளை
காத லின்பெய ரால்கூடக் கொள்ளை
கடவுளே இதுவா மக்கள் வாழ்க்கை?

வீட்டிலே இன்று நிம்மதி இல்லை
வீதியில் கூட நிம்மதி இல்லை
நாட்டிலே நல்ல நிம்மதி இல்லை
நாளும் அச்சம் பயம் பல தொல்லை
பாட்டிலே இவை பாடிடக் கூடப்
பாவலர்க் கொரு வார்த்தையே இல்லை
கூட்டிலே உள்ள சேவலைப் போலக்
கூவி என்ன பயனையாம் கண்டோம்?

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

எதிர்வரும் மே மாதத்தில்சகல தெ.ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து நடாத்த இருக்கும் என். எம். பெரேராவின் நினைவுதினக் கொண்டாட்டத்தை யொட்டிய நடாத்தப்படும் கதை, கவிதை, கட்டுரைப் போட்டி பற்றிய விபரங்கள் அடுத்த கற்பகத்தில் வெளியிடப்படும் என்பதை அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அவர்கள் எழுந்து விட்டார்கள்

"ஒருத்தரும் அடிக்கவேண்டாம்!" இந்தக் கூலிப் பட்டாளத்தை அடித்து உங்கள் கைகளையும் கறைபடிந்த கைகளாக்காக்கிக் கொள்ளவேண்டாம்" கிருபாகரனின் ஆணை இது.

விடியும்வரை பொறுத்திருந்து சந்தியிலை இவங்களை நிற்கவைத்துத் தவறணையை எரிக்கக் கொண்டுவந்த எண்ணையை ஊற்றிக் கொளுத்த வேணும் தவறணை எப்பிடி எரிஞ்சுதோ அப்பிடி இவங்களும் எரிஞ்சு சாம்பலாகவேணும் இனிமேல் கொழுத்த நினைப்பவர்க்கும் இது ஒரு பாடமாக அமையும்" நடராசன் உணர்ச்சிவசப்பட்டு பேசினான்.

இந்தச் சம்பவங்கள் புத்தூரில்தான் நடந்தது. நிலவுடைமைச் சமூக அமைப்பின் வடிவங்களை இன்னமும் அங்கே தான் முழுமையாகக்காண முடிகிறது. இன்றும் பல குடும்பங்கள் மணவராயர் வழியினரின் காணிகளில்தான் குடியிருக்கிறார்கள். நயினார்மாரின் காணியில் குடியிருக்கும் சின்னவனும். சிதம்பரியும் இந்தக் குடியிருப்புக்காணிப் பயத்தால் ந**சவேலை**யின் ஏவலர்களாக மாற்றப்பட்டே பழக்கப்பட்டு விட்டனர்.

"சின்னவன் ... சிதம்பரி ...... நீங்களெல்லாம் ஆளான ஆளாயிருக்கேக்கை எனக்கு இப்படியுமொரு சோதனையா?...... எட! கோப்பிரேசனை உந்த இடத்தாலை எடுக்கச் சொல்லி எத்தினைமுறை சொல்லிப்பாத்திட்டன். காணிக்காரன் சொன்னால் எடுப்பது அவர்தான் சொல்லவில்லையே நீ ஏனப்பா வில்லங்கமாமாரடிக்கிறீர் என்று என்னோடை ஞாயம்பேசுறுங்களடா. அவங்கடை கெட்டித்தனத்தையும் ஒருக்கால் பாத்துவிடுவம். அதைக் கொழுத்திப் போட்டு வாருங்கோடா. வாறதெல்லாம் நான் பாக்கிறன். இதை நீங்கள் செய்யேல்லையெண்டால் ... நீங்களும் காணியைக்காலிபண்ணவேண்டிவரும் அருணாசலம் நயினார் இப்படிந்தான் ஆணையிட்டுவிட்டு கைச்செலவுக்கென்று ஐம்பது ரூபா காசையும் கொடுத்து விட்டுப் போயிருந்தார்

"கோப்பிரேசன் வரமுந்தி எங்கடை ஆக்கள் தொழில் செய்யேல்லையோ? செய்தவைதானே ஆனால் நாங்கள் மனுசன் சொன்னதைச் செய்யாது விட்டால் ... குடி எழும்பத்தானே வேணும்" சின்னவனும் சிதம்பரியும் முடிவெடுத்துக் கொண்டனர்.

தைமாசப் பௌர்ணமியில் தவறணை எரிக்கப்பட்டது.

மீண்டும் தவறணைக் கொட்டில் போடப்பட்டது.

பங்குனிப் பௌர்ணமியன்று மீண்டும் எரிக்கப்பட்டது. இந்த

முறை தவறணை கள்ளுச்சாடி கள் கூட நொருக்கிச் சிதறடிக் கப்பட்டுவிட்டன.

தகவல்கள்... நடவடிக்கைகள் மீண்டும் கொட்டில் போடப் பட்டது. மூன்றும் முறையும் தவறணை கொளுத்தப்பட்ட போதுதான் சமூக நலனில் அக்கறை உள்ள இளைஞர்கள் இப்படிச் சூழ்ந்து கொண்டனர்

“இந்தச் சமூக விரோதிக ளால் எல்லோர்க்கும் வெட்கக் கேடு.

“இந்தப் புல்லுருவிகளை விட்டு வைத்தால்... முடிவு... பழைய குருடி கதவைத் திறவடி”கதை யாகத்தான்முடியும்.

திட்டங்கள்—

அமைப்புகள்... !கிருபாகரன் இப்படியாருக்கும் தெரியாம லேயே அந்தக் கிராமத்துத் துடிப்புள்ள இளைஞர்களை நெறி ப்படுத்தினன். தவறணைக்கு முன்தோட்டத்தில் நாளொரு வர் வாச்சருக்குக் கூடத் தெரி யாமல் காவலுக்கு வைக்கப் பட்டனர்.

வாச்சர் வடிவேலைக் கட்டிப் போட்டுவிட்டுத் தவறணையைப் பிரித்தனர் சின்னவனும் சிதம் பரியும். எரியிற வீட்டில் பிடுங் குவது லாபந்தானே! பீப்பாவி லுள்ள கள்ளை இயன்றவரை குடித்துவிட்டுக் கொழுத்து வோம் என்று நுழைந்து கொண்டனர்;

சீழ்க்கை ஒலிகள்—

முற்றுகை இட்டுவிட்ட இளை ஞர்களைக் கண்டபோதுதான் சின்னவனும் சிதம்பரியும் திகைத்துப் போயினர். சிங்கத் தின் குகையில் வீழ்ந்துவிட்ட சிறு நரிகளாகச் சித்தங்கலங்கி நின்றனர்.

பொழுது விடிந்தது,

மிருகக்காட்சிச்சாலையில்பார் வையாளரைப்போல் கூட்டம் கூடி வேடிக்கை பார்த்தது.

‘பழையபடி வீட்டிலேவைச்சுக் குடிமை பேணிக்கொள்ள விரும் புறுங்களாக்கும். அப்பதானே கள்ளுங் குடித்துக் கலியாண மும் முடிக்கலாம்”.

‘ஓ... பின்னை இப்ப எல்லாரும் ஒண்டாயிருந்து கை வேத்தி ஒண்டில குடிக்கப் போட்டுப் போகினமெல்லே. இதை மாத் திப்போட்டுத் துணைப்பிளா... மூக்கன்பிளா — கைபிடிப்பிளாச என்டு ஒவ்வொரு பெரிய மனுசா ருக்கும் ஒவ்வொரு பிளாவைச்சு ஒக—மோம்—போட்டுக் குடிச்ச கலக்லோ வழமெடுக்கினம்.

அநுபவச்சிறகுகள் வரலாற் றை மீட்டுப் பார்க்கும் உரை களாக வார்த்தைகள் கூடு

நின்றவர் மத்தியிலிருந்து எழுகிறது.

முகாமையாளர் நடனபாதனும், லிகிதர் சிங்காரமும் பொலிஸ்காரரோடு வந்து சேர்ந்தனர்

சின்னவனின் ஆட்களும் சிதம்பரியின் ஆட்களும் வெகுண்டெழுந்தான் செய்தனர் வேதனை வெட்கமான போது சிந்தனை சிறகடித்தது. இவங்கள் திருந்த வேணும். இவங்களை விட எமக்குச்சமூகம்தான் முக்கியம். பொங்கிக்குமுறியவர்கள் தாமே தமது எழுச்சியை வெளிக்காட்டினர்.

"தவறணைகள் கொழுத்திய தப்பிலிகள் நாங்கள்"

"கூலிப்பட்டாளமாக இனிமேல் வாழமாட்டோம்"!

முன்னும் பின்னும் இப்படி எழுதப்பட்ட விளபரங்களைக் கழுத்தில் தொங்கவிட்டுச் சின்னவனையும் சிதம்பரியையும் பொலிஸ் ஜீப்பில் நிறுத்தி வைத்து பொலிசார் ஊர்வலமாகக் கொண்டுசென்றனர்.

அந்தக்கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் அந்தக் காட்சிதான்

குலை முறிந்த வாழைபோல சின்னவனும் சிதம்பரியும் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு நின்றனர்.

இந்தக் காட்சியைக் கண்ட அருணாசலத்தாருக்கு தலைகிறுகிறுத்தது.

சின்னவனும் சிதம்பரியும் நின்ற கோலத்தில் ஒரு கணம் தன்னை நிறுத்தி வைத்து பார்த்போது அவர் சர்வாங்கமெல்லாம் கூனிக்குறுகிதலைகுனிந்து கொண்டவராக— "அவங்கள் எழும்பித்தான் விட்டாங்கள்" என்று தன்னையறியாமலேயே அவர் வாய் முணுமுணுத்தது

(யாவும் கற்பனை)

---

## அடை காத்தல்

நாட்டுக் கோழி, முட்டையை அடைகாத்து, இருபதாம் நாளில் குஞ்சு பொரிக்கும். இது இயற்கை செயற்கை முறையில், கோழி முட்டையை கடுகில் வைக்க அதன் சூட்டில் பத்து நாட்களிலும், வற்றல் மிளகில் வைத்தால் ஐந்து நாட்களிலும், கடல் சிப்பிச் சுண்ணும்பில் வைக்க ஒரு நாளிலும் குஞ்சு பொரிக்கும்.

# கற்பகமே நீ வாழி

இ. இலட்சுமிகாந்தன்
தெ. ப. போ. கூ. ச., கோப்பாய்

கற்பகதருவினிலே காலையிலும் மாலையிலும்
கலயமதில் கலன்கணக்கில் தான் இறக்கி
காய்ந்த உடல் வாடுகின்ற
கல் உடைப்போன் முதலாக கணக்கற்ற மக்களுக்கு
களைப்பதனைப் போக்குவோனின்
புகழ் பாடும் கற்பகமே நீ வாழி.

குறிப்பிட்ட சமூகத்தின் குலவிளக்காய் ஒளிர்கின்ற
கூட்டுறவுச் சங்கங்களால் நாட்டுயர்வை
நாட்டில உள்ள மக்களுக்கு நயப்புடனே எடுத்துரைத்து
வியப்பு அடையச் செய்து இங்கு
வீறுநடை போடுகின்ற
வலைவுள்ள கற்பகமே நீ வாழி.

கூட்டுறவின் தத்துவங்கள் பொதிந்துள்ள கட்டுரைகள்
சமூகக்கதைச் சீர்திருத்தும் சிறுகதை ள்தொடர்கதைகள்
கற்பனையில் புனைகின்ற கவிதைகள்
விபத்து உற்றோர் டைகின்ற வியப்புறும் நன்மைகள்
என்று பலதான சுமந்து எம்மிடையே மிளிர்கின்ற
எழிலான கற்பகமே நீ வாழி.

சமூகத்தை வளர்க்கின்ற சங்கத்தின் சேவையினால்
சமூகத்தோர் பெறுகின்ற கணக்கற்ற நன்மைகளை
சகலருக்கும் எடுத்தியம்பும் சாயலிலே வெளியாகும்
சஞ்சிகையாம் கற்பகமே நிலைபெற்று நீ வாழி.

# எழுச்சி கொண்டெழு!

எழுச்சி கொண்டு சீறடா
    ஏற்றம் யாவும் காணவே
வழுக்கி வீழ்ந்த மானிடர்
    வாழ்வில் உயர்ச்சி கொள்ளவே!

உழைத்துநாளும் என் சுகம்
    பீழை வீழ்ந்து துடிக்கிறோம்
உழைப்பை உறிஞ்சும் ஈனர்கள்
    விதியை மாற்ற நீ எழு!

இழைத்து விட்ட உடலிலே
    இருக்கும் வலுவைக் கூட்டியே
இழைக்கும் கொடுமைதன்னையே
    எதிர்த்து வெற்றி கொள்ளவே!

அழுது தொழுது வாழ்தலில்
    மரணம் ஏற்றல் நன்றடா
எளிது எளிது என்றெழு
    எழுச்சி காண்போம் என்றெழு!

உழைப்பு மட்டும் தொழிலென
    எம்மை ஆக்கி வைத்தவர்
பிழைக்கும் வித்தை கண்டும் நீ
    பீடைகொள்ள வாழ்வதோ?

வாட்டும் வறுமைத் தீயினை
    அணைத்தலெமது கடமையாம்
ஈட்டும் செல்வம் யாவையும்
    ஒன்று சேரல் ஏனடா?

ஏட்டில் கற்ற நீதிகள்
    பாட்டில் மட்டும் தூங்கவே
நாட்டில் துயர்கள் வீங்கவோ
    நாமும் துயிலல்கொள்வதோ?

துயர்கள் தம்மைப் போக்குவோம்
    துடித்தெழுந்து விரைந்திடு
அயர்ந்து நாமும் ஓய்ந்திடோம்
    என்றெழுச்சி கொண்டெழு

= விந்தன் =

# "இயற்கை வளமும் அழிவுறும் உயிரினங்களும்"

— எஸ். ஜே. ஜெயக்குமார் —

இன்று உலக நாடுகள் யாவும் புதிய போராட்டம் ஒன்றில் குதித்து உள்ளன. தத்தமது நாடுகளின் இயற்கை வளங்களைப் பாது காப்பதற்கான போராட்டமே இது. காடுகள், விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்கள் ஆகியவையே இந்த இயற்கை வளங்களாகும்.

பல அரிய உயிரினங்களும், தாவர வகைகளும் அழிந்து வருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்து உள்ளன. இதனைத் தொடர்ந்தே இந்த அழிவைத்தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அழிவில் இருந்து உலகில் தற்போது வாழ்வதாகக் கணக்கிடப்பட்டு உள்ள 43 500 இன உயிரினங்களையும். இரண்டு லட்சம் தாவரவகைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் தற்போது உலக நாடுகள் ஈடுபட்டு உள்ளன.

உலகில் 9,000 விதமான பறவைகளும், 4500 விதமான முலையூட்டிகளும், 5000 வகையான ஊர்வனவும் வாழ்ந்து வருகின்றன. இரண்டாயிரம் வகையான உயிரினங்கள் நிலத்திலும், நீரிலும் வாழக் கூடியனவாகவும் 23.000 இன மீன் வர்க்கங்கள் நீரில் மட்டுமே வாழக் கூடியன, வாகவும் இருக்கின்றன,

இவற்றின் மூலம் மனிதன் பொருளாதார ரீதியிலும், தேசிய ரீதியிலும் அடைந்துவரும் பயன்கள் அளப்பரியன, இறைச்சி,எண்ணெய் வகைகளும், தோல்கள் போன்ற பொருட்களும் இந்த உயிரினங்களில் இருந்து பெறப்படுவதுடன், போக்குவரத்துச் சாதனங்களாகவும் அவை பயன்பட்டு வருகின்றன- கென்யா போன்ற நாடுகள் தமது நாட்டு உயிரினங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலவாணியைச் சம்பாதித்து வருகின்றன.

43,000 வகை உயிரினங்களிலும் பதினாறு வகையான விலங்கினங்கள் மட்டுமே மனிதனுக்கு அடங்கி வாழக் கூடியனவாக இருக்கின்றனவாம் 16,00ம் ஆண்டில் இருந்து 359 விதமான உயிரினங்கள் முற்றாக அழிந்துவிட்டதாக உயிரியல் நிபுணர்கள் அறிவித்து இருக்கின்றனர். இப்போது சுமார் 950 உயிரினங்கள் அழியக் கூடிய சுட்டத்திலிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒவ்வொரு நாடும் தத்த

மது நாட்டில் உள்ள உயிரினங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகள் அனைத்தையும் மேற் கொண்டு வருகின்றனர்,

தற்போது உயிரினங்களின் அழிவு வீதம் நான்கு மடங்காக அதிகரித்து வருகின்றனவாம். இப்படியே அழிவு வீதம் அதிகரித்து வருமானால் இன்னும் சில வருடங்களில் உயிரினங்கள் அழிந்து ஒழிந்து விடும் என அஞ்சப்படுகின்றது இது ஒரு உலகப் பிரச்சினையாக உருவெடுத்திருப்பதால ஐ. நா. சபை இந்த உயிரினங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டு இருக்கின்றது.

இப்பிரகடனத்தில் உயிரினங்களின் முதலாவது எதிரி மனிதனே எனச் சுட்டிக்காட்டியிருப்பது பெரும் பரபரப்பையேற்படுத்தியது. சூழலுக்கு முதலாவது எதிரியான மனிதனே உயிரினங்களின் பாதுகாப்பிற்கும் சவாலாக விளங்குவது உயிரியல் நிபுணர்களின் ஆராய்ச்சியின் போது தெரிய வந்தது.

சூடான் நாட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவம் மிகவும் சுவையானது. அங்கே சிறுத்தைப் புலிகள் 'பபூன்' என்னும் குரங்குகளைப் பிடித்து உண்டு வந்ததால் அக் குரங்குகளின் இனம் குறைந்து கொண்டுவரத்தொடங்கியது 'இதனைக் கண்ட மனிதன் சிறுத்தைப் புலிகளைக் கொல்லவே, 'பபூன்' குரங்கினங்கள் பல மடங்காகப் பெருகி சூடானில் விவசாய நிலங்களுட் புகுந்து பயிர்ச் செய்கைகளை நாசம் செய்யத் தொடங்கின,

உலகிலே பெரிய உருவ அமைப்பைக் கொண்ட விலங்கினங்களின் அழிவு வீதமே கூடுதலாக உள்ளன. இதற்குக் காரணம் அவற்றின் உருவம் வேட்டைக் காரர்களின் பார்வையில் இலகுவில் தட்டுப்படுவதே யாகும். இப் பெரிய மிருகங்களின் இறைச்சி, தோல், தந்தம் போன்றவையும், பறவைகளின் இறக்கைகளும் வர்த்தகரீதியில் பணத்தைப் பெருமளவில் பெற்றுக் கொடுப்பதால் அவை வேட்டைக் காரர்களினால் கொன்று ஒழிக்கப்பட்டு வருகின்றன இதனால் அவற்றின் இனப் பெருக்கம் மிகவும் குறைந்து வருகின்றது முலையூட்டிகளில் ஏழுசத வீதமானவை அழிந்து விட்டன என்று ஆனால் பறவை இனங்களில் நான்கு சதவீதமானவை மட்டுமே அழிவுற்று உள்ளன என்றும் புள்ளி விபரங்களிலிருந்து அறிய முடிகின்றது,

பறவைகளின் அழிவு விகிதம் குறைவாக இருப்பதற்குப் பறவைகள் எங்கு இடம் பெயருகின்றனவோ அந்தச் சூழ்நிலைக்கேற்ப வாழும் தன்மையைக் கொண்டு இருப்பதுவே இதற்குக் காரணமாகும். இதனால் பறவை இனங்கள் தமது இனப்பெருக்கத்தைச்

சமநிலையில் பேணி வருகின்றன.

உலகிலுள்ள இரண்டு லட்சம் வகைத் தாவர இனங்களில் இருபதினாயிரம் வரை அழிந்து விட்டன. தற்போது அழியும கட்டத்திலுள்ள உயிரினங்களை அழிவிலிருந்து தடுப்பதறகான முயற்சிகள் வெற்றியளிப்பதற்கான சாத்தியமில்லை. எனவே, இவற்றினைக் பாதுகாப்பதற்கான முயற்சிகளைப் கைவிட வேண்டிய நிலையேற்பட்டது இது உயிரியல் நிபுணர்களுக்குக்கவலையைத் தந்திருப்பதுடன் பூதாகரமான ஒரு பிரச்சினையாகவும் உருவெடுத்திருக்கின்றது புதிய அத்திலாந்துக கடற் பிராந்தியத்தில் 'சமன்' எனனும மீனினத்தைப்பாதுகாப்பதற்காக அச் சமுத்திரத்தில் மீன பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல நாடுகள் ஒப்பந்தங்கள செய்திருககின்றன அழித்து வரும் உயிர் வாக்கங்களைப பேணி, அவை அழியாது தடுப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தேசிய வன விலஙகுச் சமமேளனம. சர்வதேச இயற்கை வன உயிரியல் பாதுகாப்பு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது:

இச் சந்தர்ப்பத்தில் உயிரியல் வல்லுனர் ஒருவர் வெளியிட்டிருக்கும் கருத்து உலக நாடுகளைச் சிந்திக்க வைத்திருப்பதுடன் பெரும சர்ச்சையையும் ஏற்படுத்தி விட்டது அவர் வெளியிட்டுள்ள கருத்து இதுதான்:-

"ஒரு கழுகை வைத்து எம்மால் பாதுகாக்க முடியாது ஆனல் நாம் ஒரு காட்டைப் பாதுகாக்க முடியும் அப்பொழுதே அழிந்து கொண்டு போகும் உயிரினங்களைப் பாதுகாக்க முடியும். உயிரினங்கள் வாழும் காடுகளை அழித்துக் கொண்டு அதே வேளையில் விலங்கினங்களையும் எவ்வாறு பாது காப்பது?"

இயற்கை நிலையை மாற்றி வரும் மனிதனின் செயலே இப்போது இயற்கைச் சமநிலை சீர்கெட்டுப் போகக் கூடிய ஆபத்தையும் உருவாக்கியிருக்கிறது. எனவே, இயற்கை வளமும், சூழலும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்

—தொடரும்

---

ஆசிரியர்: உலகத்தில் சிறந்த பூ என்ன பூ?

மாணவன்: "கசிப்பூ"

ஆசிரியர்: ஆ!

— க. வே. ந.

அன்பளிப்பு

தெங்கு பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கம்
கோப்பாய்.

வெகு விரைவில்


சந்தைப்படுத்தப்படவுள்ளது




வலி-தென் மேற்கு தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
மானிப்பாய்.

**கட்டைவேலி-உடுப்பிட்டி தெ, ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் ஆதரவில் நடாத்தப்படும்**

# குறுக்கெழுத்துப் போட்டி. இலக்கம்: 2




**இடமிருந்து வலம்:**

1. இது இல்லாதவன் பிணம் என்பர்
2. முகத்தின் பிரதான உறுப்பு (எழுத்துக்கள் மாறி உள்ளது)
4. வட எழுத்துக்கள் கலந்துள்ள இச்சொல் மலரைக் குறிக்கும்
5. இதுவும் மீன் பிடிக்க உதவும்
6. ஓர் உறுப்பின் பெயரையும் கொண்டுள்ள இச்சொல் ஒரு நதியின் பெயராகும்
9. உருக்காட்டி
10. சிவபெருமான் கோவில் கொண்டருளிய மலை இதுவென்பார் (5 எழுத்து)
12. பாசத்தின் மறு பெயர்

**மேலிருந்து கீழ்:**

1. இக் குணம் உள்ளவர்கள் சிறியோராயினும் பெரியோரே
3. வாசனைத் திரவியங்களில் இதுவுமொன்று

7. பளிங்கின் மறுபெயர் குழம்பியுள்ளது
8. இணை பிரியாக் காதலர்களுக்கு ஒப்புவமை கூறப்படும் பறவை இது
11. ஆண்மானைக் குறிக்கும் இச் சொல் குழம்பி உள்ளது
13. சர்வரோக நிவாரணி
14. பெண்களின் கண்களுக்கு ஒப்பிடப்படும் மீனினம்

பெயர் : ..............................................................................

விலாசம் : ..............................................................................

தாங்கள் சார்ந்துள்ள சங்கத்தின் பெயர் : ..................

## நிபந்தனைகள்

1. சமாச ஊழியர்கள், சமாச இயக்குனர் சபை உறுப்பினர்கள் தவிர்ந்த எவரும் பங்கு பற்றலாம்
2. போட்டிகள் தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு 'ஆசிரியர், கற்பகம்: 330, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.
3. இதில மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது.
4. பரிசு பெற்றவர் விபரம் அடுத்து வரும் கற்பகத்தில் வெளியாகும்.
5. முதற் பரிசு 25 ரூபா 2ம் பரிசு 5 ரூபா, 3-ம் பரிசு 10 ரூபா, பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும்.
6. கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் குறுக்கெழுத்துப் போட்டி இல. 2 எனக் குறிப்பிடவேண்டும்.
7. கூப்பன் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15-2-84

---

குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம்: 1
பரிசு பெற்றோர் விபரம் பின்வருமாறு

1ம் பரிசு — ந. சி. வனிதா
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

2ம் பரிசு — ந. ஜேசுதாசன்
பிடாரி கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

3ம் பரிசு — திருமதி. சிவயோகமலர் ஜெயகுமார்
"அமுதசுரபி" 2ம் கட்டையடி
அல்வாய் மேற்கு, அல்வாய்.

விடைகள் இடமிருந்து வலம்

| | | |
|---|---|---|
| 1. கற்பகம் | 2. ஒளி | 3. திரவம் |
| 4. வடவர் | 5. மழலை | 6. சித்தி |
| 7. நடேசு | 8. யாகம் | |

மேலிருந்து கீழ்

| | | |
|---|---|---|
| 1. கதிரவன் | 2. ஒஞ்சி | 3. நல்லையா |
| 9. ருசி | 10. பவணி | 11. வருமதி |
| 12. கம்பர் | 13. வெள்ளி | 14. சுகுணம் |

# சந்தை ஆராய்ச்சியின் முக்கியத்துவம்

—தேவராஜன் ஜெயராமன்—

வணிகமாணி (சிறப்பு) இறுதி வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருள் ஒன்றினை உற்பத்தி செய்யும் போது நுகர்வோரின் விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தே உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் நுகர்வோரை சென்றடைவதில் உள்ள பிரச்சனைகளையும் அறிந்து அவற்றைநிவர்த்தி செய்யக் கூடிய வழிமுறைகளை அறிதல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே உற்பத்தியாளன் ஒருவன் நுகர்வோரின் தேவையை பூரணமாக பூர்த்திசெய்ய முடியும். பொருட்கள், சேவைகளை சந்தைப்படுத்துவதிலுள்ள தடைகளையும் பிரச்சினைகளையும் கண்டறிந்து அவற்றை நிவர்த்திசெய்யும் ஒருமுறையே சந்தை ஆராய்ச்சியாகும். ஆரம்பகாலத்தில் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அதே இடத்தில்வினியோகிக்கப்பட்டது, இதனால் சந்தைப்படுத்தலில் பிரச்சினைகள் எதிர் நோக்கப்படவில்லை. அத்துடன் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்குமான தொடர்புகூடிக் காணப்பட்டது. இதனால் உற்பத்தியாளர் நேரடியாக நுகர்வோரின் விருப்பத்தை அறிந்து உற்பத்தியை மேற்கொள்ளமுடிந்தது. ஆனால் இன்று ஒரு இடத்தில் உற்பத்திசெய்யப்பட்டபொருள் நாட்டின்வெவ்வேறுபகுதிகளுக்கும், உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கும் வினியோகிக்கப்படுகிறது. அத்துடன் உற்பத்தியில் போட்டி அதிகரித்தும் காணப்படுகிறது. எனவே நுகர்வோரின் விருப்புவெறுப்பை அறிவதிலும், சந்தைப்படுத்தலின்தடைகளை கண்டறிவதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மறுபுறத்தில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையிலான தொடர்புமிகக் குறைந்து காணப்படுகிறது. எனவேவெவ்வேறுபட்டவழிமுறைகள் ஊடாக நுகர்வோரின விருப்பு வெறுப்புக்களை கண்டறிதல் வேண்டும். அதாவது சந்தை ஆராய்ச்சியை பல்வேறுபட்ட வழிமுறைகள் ஊடாக செய்தல் வேண்டும்.

## சந்தை ஆராய்ச்சியின் அனுகூலங்கள்

சந்தை ஆராய்ச்சியின் ஊடாக உற்பத்தியாளர் மட்டு

மல்ல நுகர்வோரும் நன்மை அடைகின்றனர்.

i] சந்தை ஆராய்ச்சியின் ஊடாக உற்பத்தியாளன் தன் உற்பத்தி பொருளின்குறைகளை அறியக் கூடியதாக உள்ளது- அதேபோல் நுகர்வோரும் உற்பத்திபொருளில் காணும்குறைகளை தெரிவிக்கக் கூடியதாகவுள்ளது.

ii] சந்தை ஆராய்ச்சியின் ஊடாக உற்பத்தியாளன் தன் உற்பத்தி பொருளின் தரத்தை உயர்த்தக்கூடியதாக உள்ளது.

iii] பொருளுக்கு சந்தையிலுள்ள கேள்வியை அறிந்து அதற்கு ஏற்ப பொருள் உற்பத்தியை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது.

iv] சந்தைப்படுத்துவதில் நுகர்வோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து, ஒரு திறமையான சந்தைப்படுத்தல் முறையைமேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

## சந்தை ஆராய்ச்சி மேற்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள்

i] புதியபொருளை உற்பத்தி செய்கையில்,— புதிய பொருளை உற்பத்தி செய்யும்போது பொருளுக்கான கேள்வி, உற்பத்தி பற்றி நுகர்வோரின் அபிப்பிராயம், சந்தைப்படுத்தல் வழிமுறைகள் என்பவற்றை கண்டறிய சந்தை ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

ii] பொருளின் போட்டியை அதிகரிக்க முற்படுகையில்:— ஒருநிறுவனம் தனது உற்பத்தி பொருளின் போட்டியை அதிகரிக்க முற்படுகையில் சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு பொருளின் விற்பனை வீழ்ச்சி அடைந்து செல்கையில் அதற்கான காரணத்தை அறிந்து நிவர்த்தி செய்தல் வேண்டும். எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தில்சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும்

## சந்தை ஆராய்ச்சியை எவ்வாறு மேற்கொள்ளலாம்?

i] வினக்கொத்து முறை:— பொருள் சம்பந்தமாக நுகர்வோரிடம் கேட்க இருக்கும் வினாக்கள் அடங்கிய வினக்கொத்தை தயாரித்து நுகர்வோருக்கு வினியோகித்து அதன் மூலம் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை அறிந்து தீர்க்கலாம்

ii] நுகர்வோர் சங்கங்கள் மூலம்— நுகர்வோர் சங்கங்கள்

மூலம் தொடர்பு கொண்டும் நுகர்வோரின் கருத்துக்களை அறியலாம்.

iii] சில்லறை வியாபாரி மூலம் தொடர்பு கொண்டு நுகர்வோரின் கருத்துக்களை அறியலாம், ஏனெனில் சில்லறை வியாபாரியே நுகர்வோருடன் நேரடியாக தொடர்பு கொள்ப வர் ஆவர்.

iv] நிறுவனம் பயிற்றப் பட்ட சந்தை ஆய்வாளர்கள் மூலம் நேரடியாக நுகர்வோர் களுடன் தொடர்பு கொண்டும் சந்தை ஆராய்ச்சியை மேற் கொள்ளலாம்.

## சந்தை ஆராய்ச்சியின் மூன்று படிகள்.

சந்தை ஆராய்ச்சியை மேற் கொள்ளும் போது அதனை மூன்று படிகளாக மேற்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட பொருளுக்கான சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்ளும்போது குறிப்பிட்ட பொருளைப்பற்றி யும், பொருளை பாவிப்பவர் களைப் பற்றியும், பொருள் விற் கப்படும் சந்தையைப்பற்றியும் ஆய்வு செய்தல் வேண்டும்.

i] பொருள் ஆராய்ச்சி— குறிப்பிட்ட பொருளை நுகர் வோன் எந்த வடிவத்தில், எந்த அளவில், எந்த நிறத்தில் வாங்கவிரும்புகிறன் என்பதனை அறிவதற்காக மேற்கொள்ளப் படும் ஆய்வுமுறையே பொருள் ஆராய்ச்சி, இதன்மூலம் பொரு ளின் வடிவம், அளவு, நிறம் என் பவற்றை உற்பத்தியாளன் தீர் மானித்துக் கொள்ளக்கூடிய தாக உள்ளது.

ii] நுகர்வோர் ஆராய்ச்சி— குறிப்பிட்ட பொருளைப்பாவிக் கும் நுகர்வோர் எல்லோரும் ஒரே விதமான நோக்கத்திற்காக அப்பொருளை கொள்வனவு செய்பவர்கள் அல்லர், அவர் களின் வருமானம், பல்வேறு விதமான விருப்பு வெறுப்புக் கள், தேவைகள், கலாச்சாரம் என்பவற்றிற்கு ஏற்ப அவர் களின் கொள்வனவு சக்தியும் வேறுபடும். அதாவது பல்வேறு விதமான காரணிகள் நுகர் வோன் ஒருபொருளை வாங்கும் படி தூண்டுகிறது. எனவே நுகர்வோனைப் பற்றி ஆய்வு செய்து அவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப உற்பத் தியை மேற்கொள்வதே நுகர் வோர் ஆராய்ச்சியாகும்.

iii] சந்தை ஆராய்ச்சி-குறிப் பிட்ட பொருள் விற்கப்படும் சந்தையைப் பற்றி மேற்கொள் ளப்படும் ஆய்வினை இதுகுறிக் கும். சந்தையிலுள்ள போட்டிப் பொருட்களின் நிலைமை, பொ ருளை வினியோகிப்பதிலுள்ள பிரச்சினைகள் என்பவற்றை அறிந்து நிவர்த்தி செய்வதற் காக இவ்ஆய்வு மேற்கொள்ளப் படும்.

இன்று எத்தனை உற்பத்தி நிறுவனங்கள் சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்கின்றன என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாகும் ஆனால் எந்தஒரு நிறுவனமும் நீண்டகாலத்தில் சந்தையில் நிலைத்திருக்க வேண்டுமானாலும், கேள்விக்கு ஏற்ப உற்பத்தியை மேற்கொள்வதற்கும், சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து திறமையான ஒருசந்தைப்படுத்தல் முறையை கையாளுவதற்கும் சந்தை ஆராய்ச்சி அவசியமாகும்,

சந்தை ஆராய்ச்சியின் ஊடாக நுகர்வோரின் விருப்பு வெறுப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உற்பத்தியை மேற்கொண்டு பொருளின் மீது நுகர்வோரின் நன்மதிப்பை பெறக்கூடியதாகவும். அதிக விற்பனையை மேற்கொண்டு கூடிய அளவு லாபத்தை உழைக்கக் கூடியதாகவும் உள்ளது.


## வறுமையை ஒழிக்க வழி

டாக்டர்கள் என்னை பனை வெல்லம் சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். நான் தினமும் பனை வெல்லம் சாப்பிட்டு வருகிறேன். பனை மரங்கள் இருக்குமிடம் எல்லாம் பனை வெல்லம் சுலபமாகத் தயாரிக்கலாம் வறுமையை இந்த நாட்டிலிருந்து விரட்ட இது வழியாகும்.

—மகாத்மா காந்தி.




நொடிப் பொழுதில் சம்பூரண சலவையைப் பெறப் பாவியுங்கள்

மில்க்வைற் நீல சோப்

50 மேலுறைகளுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி இலவசம்

மில்க்வைற் யாழ்ப்பாணம்

**சிறுகதை**

# காலம் கடந்த ஞானோதயம்

க: சத்தியகுலசிங்கம்
கோண்டாவில் இறுவில்
தெ. ப. பொ. கூ. சங்கம்

முருகன் தொழில் செய்யும் கத்திகளை தீட்டியவாறே 'கையிலை மடியிலையும் காசு களைஞ்சும் இல்லை.... இந்த சின்னஞ் சிறுசுகளை எப்படித்தான் வளர்த்தெடுக்கப் போகிறனோ?' என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

“எடியே பிள்ளை பரமேசு! கொம்மாவைகொஞ்சம் இஞ்சை வரச்சொல்லு. ஒழுக்கோடை நிக்கிற பாளைகளுக்கு முட்டிகளும் கட்டயில்லை...”

'அம்மா!...ணை அம்மா!'ஐயா வரட்டாம்'' வீட்டின் பின்புறம் சென்றிருந்த தாய்க்கு பரமேசு குரல் கொடுக்கிறான்.

“இந்த மனுசன் என்னவாம் எந்த நேரமும் கூப்பிட்டபடிதான்... இஞ்ச இருக்கிற பெரு வயிறு படைச்சதுகள் விட்டால்தானே!” “தாய் வள்ளிப்பிள்ளை சலித்துக் கொண்டே வந்து “ஏனப்பா கூப்பிட்டனி? உன்ரைபிள்ளைகள் என்னைப் போட்டு படுத்துகிற பாடு- ஒன்று தேத்தண்ணி வேண்டாமாம். ஒன்று தேத்தண்ணிக்கு சீனிபோட்டு நரட்டாம். சக்கரை வேண்டாமாம். சீனி விக்கிற விலையிலை எப்படி தேத்தண்ணிக்கு சீனி போட்டுக் கொடுக்க முடியும்? சக்கரைஎண்டாப்போலை கொஞ்சமாகவே திண்டு தள்ளுதுகள். முந்தியென்றால் கோப்பிறேசனிலை பனங்கட்டி செய்தாங்கள் மலிவாக இருந்தது. இதுகளும் கண்டபடி கொட்டிச் சிந்தி தின்று தள்ளிச்சுதுகள், இப்ப அவங்களும் பனங்கட்டி செய்யாது நிப்பாட்டி விட்டாங்கள்”

வள்ளிப்பிள்ளை வயிற்றெரிச்சலுடன் புறுபுறுத்தாள்.

“இப்ப சீனிவிலை கூடி இருக்கின்றபடியினால் இனிமேல்எங்களுடைய சங்கமும் பனங்கட்டி செய்யும்போலை கிடக்கு. அது இருக்கட்டும், உன்ர ஊர்சுத்தி மூத்தமகன் எங்கே போட்டான்'

'விடியக்காலமைஎழும்பி கால் முகம்கழுவினான். சாப்பிட்டான். சேட்டுக்களிசானை மாட்டிக்கொண்டு உதாலைபோறான் என்றான் வள்ளிப்பிள்ளை. “அது சரி, அவன் படிப்பைத்தான் இடையிலை குழப்பினான், இந்த

சிவலையென்றாலும் சீவடா என்றால் அதற்கும் மாட்டன் என்கின்றான். சரி, இந்த மேசன்மாருக்கு பிறந்தாலையாவது போனால் நல்ல சம்பளம் கொடுப்பாங்கள்தானே? நான் ஒருத்தன் தனியக் கஷ்டப்பட்டு எப்படியப்பா இந்த பிள்ளைகளை வளர்க்க முடிம்?'

"கடவுள் எங்களை கைவிட மாட்டாரப்பா... நாம் என்ன செய்யமுடியும்? முதல் பிறந்த மூன்று குஞ்சுகளும் இறந்து விட்டதே என்று பின்னாலை பிறந்த இவனுக்கு அதிக செல்லம்கொடுத்து வளத்தம். இப்ப அனுபவிக்கிறம்." முருகனின் கவலைதோய்ந்தமுகம்எதையோ சிந்தித்தது.

கவலைப்படாதீர்கள்.

"அவனுக்கு ஏதோ கிரகம் பிழைபோல இருக்கு... அவனுடைய கால கஷ்ரம்தான் இப்படி அவனை போட்டு உலைக்கிறது" என்று வள்ளிப்பிள்ளை கூறிமுடிப்பதற்குள் முருகனுக்குகோவமேவந்து விட்டது.

"உன் பிள்ளை தறுதலையா படிப்பையும் குழப்பிப்போட்டு றோட்டிலை திரிந்துவிட்டு வந்து சாப்பிட்டுவிட்டு போறானே அதற்கு கிரகம் பிழை இல்லை. உழைக்கிறத்துக்கு மட்டும் தானாக்கும் கிரகம் பிழை. நீ சின்னனுகளை யெல்லாம் பட்டினி போட்டு அருமை மகனுக்கு ஊட்டி விடுகிறியே அது தான்பிழை.' என்றான் முருகன்.

"ஐயா இந்தாங்கோதேத்தண்ணீர் குடியுங்கோ என்றான் பரமேசு கொண்டாபிள்ளையென்று வாங்கி குடித்தான் முருகன்.

"மெய்யேயப்பா ஏதும் காசு கீசுகிடக்கே? இருந்தா கொண்டு வா! ஒரு பத்து பதினைந்து முட்டி இப்போதைய்பாட்டுக்கு வாங்கினால்தான் நல்லது. மரங்களிலை இருக்கிற முட்டிகளையும் பள்ளிக்கூடத்திற்கு போறவாற பொடியள் எறிந்து உடைக்குதுகள்" என கூறினான் முருகன். நீங்கள் நேற்றைக்கு தந்தகாசில்தான்ஒருபதினைந்து ரூபா இருக்கிறது. அதுவும் இன்றைக்கு சாப்பாட்டிற்கும் இதுதான் இந்தாருங்கோ இதை கொண்டுபோய் முட்டியை வாங்குங்கோ" சீலை தலைப்பில் முடிந்திருந்த காசை அவிட்டுக்கொடுத்தாள்வள்ளிப்பிள்ளை

அன்று மாலையானதும் தன் மகன் வருவதைக்கண்டவள்ளிப்பிள்ளை, "இவ்வளவு நேரமும் எங்கேயடா போட்டு வாறாய் கொஞ்சம் என்றாலும் உனக்கு சிந்தனை இல்லையடா, சரி, சரி சாப்பிடவாடா என அழைத்தான். உடுப்பை மாற்றிக் கொண்டு சாப்பாட்டுக்காக நுழைந்தான் பாலன். வள்ளிப்பிள்ளை மெதுவாக கதையைத் தொடக்கினாள்.

"ஏனடா தம்பி கடைக்கார நடராசருடைய தோட்டத்து புகையிலைக் கன்றையெல்லாம் பெடியளுடன் சேர்ந்து பிடுங்கி

எறிந்தனியாம்?' என்றுள்.

'யார்சொன்னது?நான் போகவும் இல்லை எனக்கு தெரியவும் மாட்டுது' என பாலன் அதட்டினன்.

வள்ளிப்பிள்ளைக்கு கோவமே வந்து விட்டது. 'செய்திறதையும் செய்து போட்டு பொய் கூட சொல்லுகிறுயாடா? அந்த மனுஷர் நடராசர் மனம் தாங்கமாட்டாமல் எங்கட பரமுவிட மெல்லே சொல்லி விட்டவர்'

'அதுதானே பார்த்தேன்! இந்த பரமண்ணைக்கு ஊர் விதானையார் என்றுபெயர்வைத்தது பொருத்தம் போலத்தான் இருக்கிறது.' என பாலன் சொன்னுன்.

தொடர்ந்து வள்ளிப்பிள்ளை ஏனடா அப்படிசெய்தனீங்கள். அந்த நல்லமனுசனுக்கு இப்படி ஒரு கெடுதல் செய்ய எப்படியெடா மனம் வந்தது?

"பிள்ளை என்னம்மா எங்களை கண்டவுடன் விடுகாலிகள் ஊர் சுத்திகள், ரேட்டளக்குதுகள் என்றுல் நாங்கள் விடுவோமா?' அதுதான் அப்படி செய்தோம்' என பாலன் கூறினுன்.

"அந்த மனுஷன் சொன்னதிலை என்னடா பிழை இருக்கிறது? உங்களைப்பற்றி உன்னத்தை தானேடா சொல்லி இருக்கிருர். உனக்கு பொறுப்புணர்ச்சி கொஞ்சம் என்றுலும் இருக்கேடா. இப்படி ஏன்ரா தறுதலையாக திரிகின்றுய்? உன்னை நம்பித்தானேடா உன் ஐயா, நான், உன் தம்பி, தங்கைமார் எல்லோரும் இருக்கிறேம். இப்படியே நீ திரிந்தால் எங்கடை சீவியம் எப்படியடா போவது? அதோடு உனக்கு ஒரு தங்கச்சி குமராகவல்லேயடா இருக்கிறது. இது உனக்கு தெரியவில்லையாடா? காலா காலத்திலே அந்த பிள்ளைக்கு ஒரு கலியாணத்தைக் கட்டி வைத்துபார்க்க வேண்டாமாடா அந்த மனுஷன் வயது போன காலத்திலே உன்னை இருக்கவிட்டு எப்படியடா உழைத்து தரமுடியும்? எப்படியெடா இந்தக் குடும்பச் சுமையை தனித்து சுமக்கமுடியும்? நீயும் உழைத்தால் அந்தாளுக்கு ஆறுதலாக இருக்காதாடா? ஏன்ரா நீயும் ஐயாவோடு சேர்ந்தால் சீவினுல் எங்கடை கஷ்ரம் எல்லாம்நீங்கி நாங்கள் நிமதியாக இருக்கலாமேடா?" என்றுள் வள்ளிப்பிள்ளை.

ஐயாவிற்கு விசர் என்றுல் எனக்கும் விசரே? இந்தக்கோப்பிறேசனுக்கு சீவிக் கொடுத்திட்டு கோப்பிறேசன் காரர் எல்லாம் அடித்துக் கொண்டு போக மிகுதி காசிலே தான் ஏதோ கள்ளுத்தந்த சம்பளக் காசு என்று கொடுக்கிருர்கள் சீவுகிற கள்ளை வீட்டிலேவைத்து எங்களுடைய பாட்டில் விற்றுல் முழுக்காசு மெல்ல எங்களுக்கு

—தொடரும்

# சங்கச் செய்திகள்

## “காந்திகண்டகனவு இங்கு நனவாகியுள்ளது”

பனைத்தொழில்(சீவல்தொழில் செய்வதில் எவ்வித கேவலமுமில்லை. ‘படித்தவர்களும் பனைத் தொழில்செய்ய முன்வர வேண்டுமென’ காந்தி கூறினார் அன்று காந்தி அடிகள் கண்ட கனவு இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நனவாகியுள்ளதைகாணும்போது உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்”

இவ்வாறு இந்திய பனம் பொருள் நிபுணரும், இலங்கை பனைச்சபையின் விசேட ஆலோசகருமான டாக்டர் கே.சம்பந்தம் அவர்கள் அளவெட்டி-மல்லாகம் தெ. ப. பொ. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. சி. செல்லத்துரையின் தலைமையில்கூட்டம் நடைபெற்றது,

திரு. சம்பந்தம்தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவிலும் படித்தவர்கள் பனைத்தொழில் செய்கிறார்கள். ஆனால் அவர்களை விடவும் ஒருபடி முன்னேறி நிர்வாகத் துறையையும் பனைத் தொழில் செய்யும் இங்குள்ள படித்த இளைஞர்கள் தமதாக்கிக் கொண்டு திறம்பட சங்கங்களை வழிநடாத்தி வருகிறார்கள். சங்கங்களின் சமாசத்தலைவர் திரு, அமிர்தநாதன் நன்கு படித்த இளைஞராக இருப்பதுடன் சிறந்த பனைத் தொழிலாளியாக இருப்பதும் உண்மையில் பெருமைப்படக் கூடியதொன்றாகும்.

இங்கு தொழிலாளர்களே நிர்வாகிகளாகவும் இருப்பதால் சகதொழிலாளரின் பிரச்சினைகளை உணரவும் முடிகின்றது. பிணக்குகளையும் பிரச்சினைகளையும் கூட்டம் கூட்டி அலசி ஆராய்ந்து தீர்ப்பதிலும் இங்கு முன்னோடியாக இருக்கிறீர்கள். அதுமட்டுமன்றி இந்தியப் பனைத் தொழிலாளரைவிட இங்குள்ள தொழிலாளரின் பொருளாதார நிலையும் சிறந்த நிலையிலுள்ளது நீங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றங்களையும் அனுபவங்களையும் நான் இந்தியாசென்று

சொல்வதில் பெருமையடைவேன்.

திரு. சம்பந்தம் தொடர்ந்து பேசுகையில், சங்கங்கள் கள் உற்பத்தியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. பனையின் மூலப் பொருள்களைக் கொண்டு வெவ்வேறு தொழில்களை செய்ய வேண்டும். எதிர்கால விளைவுகளை நினைவில் கொண்டு பல குடிசைக் கைத்தொழில்களையும் உண்டாக்கி பெண்களையும் அதில் ஈடுபடுத்த வேண்டும். அப்போதுதான் உயர்ந்துவரும் வாழ்க்கைசெலவை ஓரளவாவது சமாளிக்க முடியும்.

## தாய்ப்பாலுக்கு சமமானது

தாய்ப்பாலிலுள்ள சத்து கருப்பநீரிலுள்ளது. ஊட்டச்சத்து உயிர்ச்சத்து அனைத்துமே கருப்பநீரிலுள்ளது. பல நோய்களைக் குணப்படுத்தக் கூடிய தன்மை இயற்கையிலேயே பதநீருக்குண்டு. இதற்கீடாக உலகத்தில் வேறெங்கும் இந்த இயற்கையான சர்வரோக நிவாரணியை போன்று இதுவரை எந்தவிஞ்ஞானியும் கண்டு பிடிக்கவில்லை.

அமெரிக்கப்பெண்கள் எமது பனை ஓலைப் பொருட்களில் இன்று பெரும் மோகம் கொண்டுள்ளார்கள். ஓலையில் பின்னப்பட்ட கூடைகளில் குழந்தைகளை வைத்து தூக்கிச் செல்வதில் பெரும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு, க. நடராசா, சமாசத் தலைவர் திரு. தி. அமிர்தநாதன், கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. ச. வேலாயுதம்பிள்ளை உட்பட பலரும் கருத்துரை வழங்கினர்.

சங்கச் செயலாளர் திரு. மா மாணிக்கம் 84-85ம் ஆண்டுக்கான செயற்திட்ட அறிக்கையை வாசித்தார். சங்க ஊழியர் திரு. கி. குணரத்தினம் நன்றி உரை கூறினார்.

---

## மீண்டும் தலைவரானார்

ஊர்காவற்றுறைதெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10 வது வருடாந்த பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. கு. மத்தியாஸ் (ஜே. பி.) தலைமையில் சங்கப் பணிமனையில் 29-12-83ல் நடைபெற்றது. கூ. உ. ஆ ஆணையாளர் (ப. பொ.) அவர்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் திருவாளர் திரு. கு. மத்தியாஸ் அவர்கள் மீண்டும்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம்

1. தலைவர்: திரு. கு. மத்தியாஸ்
2 உபதலை. ,, இ. இரத்தினம்
3. செயலாளர்:- திரு. யா. அமலதாஸ்

1, திரு சு. யோசப்
2. ,, பி. டொமினிக்
3 ,, ம. சேவியர்
5. ,, ஆ. நாகராசா
4. ,, சு செல்வரெத்தினம்
6. ,, நீ. அ. இராசேந்திரம்

# 1980-83-ஆம் ஆண்டுகளில் பச்சிலைப் பள்ளி (பளை) தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தின்

# செயற்பாடுகள்

* 1-5-80—30-4-81 வரையான எண்பார்வைக் காலத்தில் ரூபா 18057/58 ஐ 2 வது தடவைக் கொடுப்பனவாக சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கி அங்கத்தவர்களை ஊக்குவித்தது.
* 1-5-81—30-4-82 திகதி வரையான எண்பார்வைக் காலத்தில் ரூபா 74595/56 ஐ 2 வது தடவைக் கொடுப்பனவாக அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் அங்கத்தவர்களின் ஏகோபித்த விருப்பத்தின் பெயரில் சங்கத்திற்கென சொந்தமாக காணிகட்டிடம் கொள்வனவு செய்வதற்காக சங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டது.
* 1-5-82—30-4-83 திகதி வரையான எண்பார்வைக் காலத்தில் ரூபா 1,21,135/-40 சதத்தை 2 வது தடவைப் பணமாக அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு ஒதுக்கி வைத்திருந்தும் இப்பணமும் அங்கத்தவர்களின் ஏகோபித்த சம்மதத்துடன் காணிகட்டிடக் கொள்வனவுக்காக சங்கத்திடமே மீள ஒப்படைக்கப்பட்டது.

### காணி, கட்டிடம் கொள்வனவு

* அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட இரண்டாம் தடவைப் பணத்தைக் கொண்டு பளை பஸ்நிலையத்திற்கு முன்பாக 23/4 பரப்பு காணியை 2 கடைகளுடன் ரூபா 2,42,550/-விற்கு கொள்வனவு செய்துள்ளது.

### அறக்கொடை திட்டம்

* சங்க அங்கத்தவர்கள் 142 பேருக்கு ரூபா 600/- வீதம் அறக்கொடைத்திட்டத்தை இலங்கை வங்கியில் ஏற்படுத்தியுள்ளதுடன், ஊழியர்கள் 33 பேருக்கும் 600/- கொண்ட அறக்கொடைத்திட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்கான பணம் ரூபா 1,05000/- சங்கம் சொந்தப்பணத்தில் வங்கிக்கு செலுத்தி அங்கத்தவர்கள் ஊழியர்களிடம் பகுதி பகுதியாக அறவிடப்படுகின்றது.
* சங்கத்தில் நெறியாளர் குழு உறுப்பினர்களாக கடமையாற்றிய 13 பேருக்கு சங்கப்பணத்தில் இருந்து புதிய சயிக்கிள் வண்டி வழங்கி பகுதிபகுதியாக பணம் அறவிடப்படுவதுடன், ஊழியர் 22 பேருக்கும் புதிய சயிக்கிள் வண்டி வழங்கி பகுதி பகுதியாக பணம் அறவிடப்படுகின்றது.
* சங்கம் பின்வரும் விபரப்படியான தொகைகளை நிரந்தர வைப்பில் பளை மக்கள் வங்கியில் இட்டுள்ளது.

※ கடன் திட்டம் ஒன்று சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு அங்கத்தவர் அவரது உறவினர் மரணம் எய்தின் அங்கத்தவருக்கு ரூபா, 1000/- கடனுதவி உடன் வழங்கப்படுகின்றது. அத்துடன் விஷேட காரணங்களை முன்னிட்டு அங்கத்தவர், ஊழியர்களுக்கும் ரூபா 1000/- வரை கடன் வழங்கப்படுகின்றது. இவ்வாறாக சங்கப் பணத்தில் அங்கத்தவர்களுக்கு 25,000/- வும் ஊழியர்களுக்கு 15000/- வும் மொத்தம் 40,000 கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## கிடுகு உற்பத்தி நிலையங்கள்

※ மூன்று கிடுகு உற்பத்தி நிலையங்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு கிடுகு விற்பனை மூலம் மாதாந்தம் சராசரியாக 3000/- வரை சுத்தலாபமாக கிடைக்கின்றது. இதனால் சங்க எல்லைப்பரப்பிற்குள் 50 பெண்மணிகளுக்கும் வேலை வாய்ப்பையும் சங்கம் வழங்கியுள்ளது.

## பனம் தும்பு

※ பனத்தும்பு கிலோ. 8/-50 வீதம் அங்கத்தவர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் கொள்வனவு செய்து ப. பொ. அ. சபைக்கு சங்கம் வழங்கி கிராமிய மட்டத்தில் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகின்றது.

## ஊக்குவிப்பு பணம்

※ 1-5-82 — 30-4-83 வரையான எண்பார்வைக் காலத்தில் சங்க ஊழியர்களுக்கு 12573/- ரூபாவை ஊக்குவிப்பு பணமாக வழங்கி ஊழியர்களின் சேவையை மேலும் திருப்தியான முறையில் பெறுவதற்கு வழி சமைத்தமை

## சீனித் தொழிற்சாலை

※ 1984 ம் ஆண்டு சீனித்தொழிற்சாலை ஆரம்பித்து நடாத்தும் பொருட்டு மக்கள் வங்கியில் ரூபா 200000/- கடனுதவிப் பெற்று சீனி செய்வதற்கு யந்திர உபகரணங்கள் பொருத்தும் வேலையில் சங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது.

சங்கத்தின் மேற்படி துரித செயற்பாடுகளுக்கும், வளர்ச்சிக்கும் ஊழியர், அங்கத்தவர்கள் ஆகியோரது ஒத்துழைப்பும் திறமையான நிர்வாகமுமே காரணம் என சங்க நிர்வாகம் பெருமைப்பட்டுக்கொள்கின்றது.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

சாவகச்சேரி தெ. ப. பொ. கூ சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 21-01-84ல் நடைபெற்றது. புதிய நிர்வாக சபைஉறுப்பினர்களாகபின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

திரு. செ. சின்னராசா
திரு. மா. கிருஷ்ணன்
,, க, சரவணமுந்து
,, க, இராசதுரை
,, ச. செல்லையா
,, சு, வெள்ளையன்
,, நா, மாணிக்கம்
,, க. நாகமுத்து
,, க. செல்வராசா

## புதிய நிர்வாக சபை

கிளிநொச்சி தெ. ப. பொ. கூ சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 22-12-83ல் நடைபெற்றது, புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

திரு. செ, சிறி ஜெயச்சந்திரன் (தலைவர்)
,, பூ. சின்னப்பிள்ளை (உப-தலைவர்)
,, ஐ. இராசலிங்கம் (செயலாளர்)
,, ம. அரியகுட்டி
,, வே, செல்வராசா
,, அ. யேசுராசா
,, நா. வேலுப்பிள்ளை
,, ரூ. மன்மதராசா
,, சி. தரணிவாசகம்

---

அன்பான வாசகர்களே !

கற்பகம் சஞ்சிகை தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். உங்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம். அதுமட்டுமன்றி உங்களின் ஆக்கங்களையும் எழுதி அனுப்புங்கள். தரமானதும் தகுதியானதும் நிச்சயமாக பிரசுரிக்கப்படும்.

# வாசகர் கருத்து

கலைக்கோவில்
இளவாலை.

ஆசிரியர் ''கற்பகம்''

ஐயா,

வடமாகாண தே. ப. பொ. கூ. சமாசத்தின் வெளியீடான "கற்பகம்" சஞ்சிகையை கண்டேன். ஈழத்தில் தரமான தமிழ்ச் சஞ்சிகைகள் இல்லையே என்ற ஆதங்கம் எனக்கு நெடுநாட்களாக உண்டு. வருகின்ற அல்லது எமக்குக் கிடைக்கின்ற சஞ்சிகைகளெல்லாம், வாசகர்களின் சிந்தனையை மலிவுபடுத்தும் மூன்றுந்தர படைப்புக்களை (படைப்புக்களா அவை...?) வியாபார நோக்கோடு வெளிப்படுத்தும் சாதனங்களாகவே உள்ளன.

மக்களின் பிரச்சனைகளை அணுகுவதும், அவர்களின் விடிவுக்கான சுவடுகளை கூட்டுவதும் இலக்கியத்தின் பணி அல்லவென்றால், அம்மாதிரியான இலக்கியங்கள் தேவைதானு?

வக்கரித்துப்போன மனிதனின் சதை உணர்வுகளுக்கு தீனிபோடத்தானே, இலக்கியம் என்றபோர்வையில் குப்பைகள் நம் நாட்டில் மலிந்து கிடக்கின்றன.

''கற்பகம்'' சஞ்சிகை அவ்வாறனதல்ல என்பதில் எமக்கு திருப்தி. ஆனல் பூரண திருப்தி என்று கூறிவிடமுடியாது.

''கற்பகத்திற்கு என்று ஒரு சமூகப்பணி உண்டு.
''எங்கெங்கு அநியாயம் நடக்கிறதோ.., அங்கு...
எங்கெங்கு அடக்குமுறை நிலவுகிறதோ... அங்கு...
எங்கெங்கு மக்களின் பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டுமோ... அங்கு ..

கற்பகம் முகம் கொடுக்கவேண்டும். மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து விடவேண்டும். மக்களுக்காக இலக்கியமே தவிர, இலக்கியத்திற்காக மக்களல்ல!

எனவே, இந்தப் பின்னணியில் தான் கற்பகத்தில் வெளிவருகின்ற கதைகளோ, கட்டுரைகளோ கவிதைகளோ இருக்கவேண்டும். அப்போதுதான் எமது திருப்தி பூரணத்துவ மானதாக இருக்கும்.

செய்வீர்களென்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

நன்றி

இங்ஙனம்
ஆ. அமலதாஸ்

ஆசிரியர்
'கற்பகம்'
வடமாகாணம் தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசம்
யாழ்ப்பாணம்.

கொடிகாமம்
12-01-84.

ஐயா,

தங்களின் கன்னி வெளியீடாகிய 'கற்பகம்' சஞ்சிகை கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தேன். முதலாவது இதழிலேயே ஓரளவு தரமான விடயங்களைத் தாங்கி மலர்ந்திருப்பது பாராட்டுக்குரியது. எனினும் வருங்காலத்தில் இலங்கையில் வெளியாகும் தரமான சஞ்சிகைகளில் ஒன்ருக விளங்கவேண்டுமென்பது எனது அவாவாகும்.

மேலும் 'கற்பகம்' என்ற பெயருக்கேற்ப இச் சஞ்சிகை கற்பகதருவாகிய பனையின் மூலவளங்களைச் சித்தரிக்கும் அட்டைப் படத்துடன் மிளிருமானுல் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

நன்றி'

இங்ஙனம்
அன்பன்
க. பாலசுப்பிரமணியம்


With Best Compliments From:

**Promoters Engineering Company Ltd.**

844, Point Padro Road
JAFFNA.

T'Phone: 24006, 23394

# ஒரு மெகதொன் அணுக்குண்டின் அழிவுச் சக்தி

- ஒரு மைல் சுற்றளவுள்ள பிரதேசத்தில் தீய்ப்பிடித்து எரியும்.
- 250 மைல் அகலத்திற்கும் 650 மைல் நீளத்திற்கும் நான்கு நாள் கதிரியக்கம் நடைபெறும்,
- 9 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்கள் சுவரில் தூக்கி மோதப்படுவார்கள்.
- குண்டு வெடித்த இடத்திலிருந்து 8 மைல் உயரத்திற்கு தீய்ப்பத்து எழுந்து வானத்தை நோக்கி செல்லும்.
- 8 மைல் உயரத்திற்கு எழும்பும் தீய்ப்பந்தை 32 மைல் களுக்கு அப்பால் இருந்து பார்ப்பவர்களின் கண்கள் குருடாகும்,
- 4 மைல்களுக்கு அப்பாலுள்ள கட்டிடங்கள் கூட பொரிப் பொரியாக (இத்துப்) போகும்.
- 6 மைல்களுக்கு அப்பால் உள்ள ஜன்னல் கம்பிகள் சோளப் பொரிபோல் வெடித்துச் சிதறும்
- ஒரு மெகதொன் அணுக்குண்டின் அழிவுச் சக்தியே இப்படிப்பட்டதாயின் 20 மெகதொன் அணுக்குண்டினதும் நியூரோன் குண்டினதும் அழிவுச்சக்தி எப்படிப் பட்டதென எண்ணிப்பார்க்க முடியுமா?

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................

# உங்கள் உணவைச் சுவையூட்டுங்கள்!

எமது கற்பகம் விற்பனை நிலையங்களிலும் தனியார் நிலையங்களிலும் தற்போது விற்பனைக்கு வந்துள்ளன.

**பனம் சிரப்!**

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது, சுவை மிகுந்தது. சீனிக்குப்பதிலாக உபயோகிக்கக்கூடிய புரதம், இரும்பு, கல்சியம், குளுக்கோஸ் என்னும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது பி. பி.சீ, உயிர்ச்சத்துக்கள் செறிந்தது. தயிர், அப்பம், பாண் போன்ற உணவு வகைகளைச் சுவையூட்டச் சிறந்தது.

**பனம்கோடியல், பனம்பானம்**

சோடாவிற்குப் பதிலாக நாள்தோறும் பருகிச் சுவைத்திட அருமையான சுவையூட்டப்பட்ட பானம், அருந்தி மகிழ்ந்திடுவீர்.

**பனம் ஜாம்**

பனம் பழத்திலிருந்து சுத்தமாக தயாரிக்கப்பட்ட சுவையான உணவு.

## பனை அபிவிருத்திச் சபை
## தேசிய வீடமைப்புச் செயலகம்

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23801

**'கற்பகம்' விற்பனை நிலையங்கள்**

- 224, காலி வீதி, பம்பலப்பிட்டி
- பிரதான வீதி, மன்னார்
- பொதுச் சந்தை சதுக்கம், மட்டக்களப்பு.
- ப. நோ. கூ. ச. கட்டிடம் கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
- யாழ். மாநகரசபைக்கட்டிடம் 32, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு.

வட மாகாண தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் யாழ் 10, பிரதான வீதியில் உள்ள கலைவாணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.